# தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:..........................................................................

நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெய்யெழுத்தின் வகைகள்

அ ) 18 ஆ ) 2

இ ) 30 ஈ ) 3

2. குமண மன்னனைக் காணச் சென்ற புலவர்

அ ) ஔவையார் ஆ ) கபிலர்

இ ) பெருந்தலைச்சாத்தனார் ஈ ) பாவேந்தர்

3. குச்சியில் ஆமையைத் தூக்கிச் சென்ற பறவைகள்

அ ) கொக்குகள் ஆ ) நாரைகள்

இ ) பருந்துகள் ஈ ) காகங்கள்

4. கடற்குளிப்புக்காக மக்கள் நாடி வருகின்ற கடலோரச் சிற்றூர்

அ ) திருமலை ஆ ) கதிரமலை

இ ) திருகோணமலை ஈ ) கீரிமலை

5. அவை + ஐ

அ ) அதை ஆ ) அதனை

இ ) அவற்றை ஈ ) அவர்களை

6. அவன், அவர்கள், அது என்பன

அ ) தன்மை ஆ ) படர்க்கை

இ ) முன்னிலை ஈ ) ஒருமை

7. துன்பம் கண்ட போதிலே துறந்து போதல் இல்லையே எனக் கூறியது

அ ) ஆமை ☐ ஆ ) தவளை ☐

இ ) அன்னம் ☐ ஈ ) கொக்கு ☐

8. சுட்டாலும் வெண்மை நிறம் மாறாதது

அ ) சங்கு ☐ ஆ ) கிழங்கு ☐

இ ) நுங்கு ☐ ஈ ) இளநீர் ☐

9. தமிழ்மக்களது அமைதிவழிப் போராட்டம்ஆயுதப்போராட்டமாக மாறிய ஆண்டு

அ ) 1971 ☐ ஆ ) 1974 ☐

இ ) 2009 ☐ ஈ ) 1972 ☐

10. காலப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) மாதம் ☐ ஆ ) கால் ☐

இ ) காடு ☐ ஈ ) கப்பல் ☐

11. போர்த்துக்கேயர் வருகையின்போது தமிழீழத்தில் நிலவிய அரசு

அ ) கரையோரச்சிங்கள அரசு ☐ ஆ ) கண்டி அரசு ☐

இ ) யாழ்ப்பாணத்தமிழ் அரசு ☐ ஈ ) கோட்டை அரசு ☐

12. **முத்தே பவளமே என் முக்கனியே** என்ற பாடல்

அ ) ஏர்ப்பாடல் ☐ ஆ ) அறுவடைப்பாடல் ☐

இ ) தாலாட்டுப்பாடல் ☐ ஈ ) தொழிற்பாடல் ☐

13. உழுகின்றார் என்பது

அ ) எதிர்காலம் ☐ ஆ ) இறந்தகாலம் ☐

இ ) வருங்காலம் ☐ ஈ ) நிகழ்காலம் ☐

14. எல்லாளனுடன் போர் தொடுக்க வேண்டாம் எனக் கூறியவன்

அ ) காகவனத்தீசன் ☐ ஆ ) துட்டகெமுனு ☐

இ ) சூரத்தீசன் ☐ ஈ ) தேவநம்பியதீசன் ☐

15. மேழி என்பது

அ ) வயல் ☐ ஆ ) கலப்பை ☐

இ ) நெல் ☐ ஈ ) மாடு ☐

16. உயிர்க்குற்றெழுத்துகளின் எண்ணிக்கை

அ ) 12 ☐ ஆ ) 7 ☐

இ ) 18 ☐ ஈ ) 5 ☐

17. ஒருமை, பன்மை என்பன

அ ) பால் ☐ ஆ ) எண் ☐

இ ) இடம் ☐ ஈ ) திணை ☐

18. மடுமாதா கோவில் அமைந்துள்ள இடம்

அ ) வவுனியா ☐ ஆ ) மன்னார் ☐

இ ) புத்தளம் ☐ ஈ ) கிளிநொச்சி ☐

19. பின்வருவனவற்றுள் பொதுநிலையம் அல்லாதது

அ ) வீடு ☐ ஆ ) நூல்நிலையம் ☐

இ ) பள்ளி ☐ ஈ ) மருத்துவமனை ☐

20. மாமன்னன் எல்லாளனின் நினைவிடம் அமைந்துள்ள இடம்

அ ) மன்னார் ☐ ஆ ) பொலநறுவை ☐

இ ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) அநுராதபுரம் ☐

21. 'விளக்கேந்திய பெருமாட்டி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்

அ ) மேரிக்கியூரி அம்மையார் ☐

ஆ ) அன்னை தெரேசா ☐

இ ) அன்னை பூபதி ☐

ஈ ) புளோரன்சு நைட்டிங்கேல் ☐

22. வெளவால் என்ற சொல்

அ ) ஆண்பால் ☐ ஆ ) பெண்பால் ☐

இ ) ஒன்றன்பால் ☐ ஈ ) பலவின்பால் ☐

23. ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்பன

அ ) மெல்லின மெய்கள் ☐ ஆ ) உயிர் மெய்கள் ☐

இ ) இடையின மெய்கள் ☐ ஈ ) வல்லின மெய்கள் ☐

24. மணிபல்லவம் இன்று ____________ என அழைக்கப்படுகிறது.

அ ) நயினாதீவு ☐ ஆ ) அனலைதீவு ☐

இ ) நெடுந்தீவு ☐ ஈ ) மண்டதீவு ☐

25. **பழமொழி:**

நீர் அடித்து நீர்

அ ) அழியுமா ☐ ஆ ) கலங்குமா ☐

இ ) விலகுமா ☐ ஈ ) இருக்குமா ☐

26. மங்கை குளிர்பானத்தை மகிழ்வுடன் பருகினாள். இதில் இடம் பெற்ற செயப்படுபொருள்

அ ) பருகினாள் ☐ ஆ ) குளிர்பானத்தை ☐

இ ) மங்கை ☐ ஈ ) மகிழ்வுடன் ☐

27. **குறள்:**

வானோக்கி வாழு முலகெல்லா __________

கோனோக்கி வாழுங் குடி

அ ) தென்னவன் ☐ ஆ ) மன்னவன் ☐

இ ) சின்னவன் ☐ ஈ ) வறியவன் ☐

28. சிரித்தல் என்பது

அ ) காலப்பெயர் ☐ ஆ ) பொருட்பெயர் ☐

இ ) தொழிற்பெயர் ☐ ஈ ) சினைப்பெயர் ☐

29. **நெல்சன் மண்டேலா** நாள் என ஐ.நா. அறிவித்த நாள்

அ) யூலை 10 ☐ ஆ ) யூலை 28 ☐

இ ) யூலை 16 ☐ ஈ ) யூலை 18 ☐

30. இயக்கரது ஆட்சி இருந்த இடம்

அ ) நாகதீபம் ☐ ஆ ) மணிபல்லவம் ☐

இ ) கல்யாணி ☐ ஈ ) நயினாதீவு ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தஞ்சைப் பெருங்கோவில் இராசராசசோழனால் கட்டப்பட்டது. இக் கோவில் வாயிலின் மேல் ஐந்து நிலைகள் உடைய கருங்கல் கோபுரம் உயர்ந்து நிற்கிறது. இக்கோபுரமே தமிழகத்தில் எழுப்பப்பட்ட மிக உயரமான முதற் கோபுரமாகும். கோபுரத்தில் தெய்வச் சிற்பங்களும் விலங்குச் சிற்பங்களும் காணப்படுகின்றன. இவையனைத்தும் உயிரோவியங்களாகக் காட்சியளிக்கின்றன. கோபுரத்தின் உச்சியில் மிகப்பெரிய உருண்டை வடிவக்கல் ஒன்று இருக்கின்றது. அக்கல்லின் எடை 81 தொன்கள். அக்காலத்தில் பெரிய கல்லை அவ்வளவு உயரத்திற்கு எப்படிக் கொண்டு போனார்கள் என்று அறிவியலாளர்கள் இன்றும் வியந்து நிற்கின்றனர். பண்டைத்தமிழனின் கலை உணர்வையும் ஈடுபாட்டையும் சொல்ல முடியாது. என்னே! ஒரு கலை உள்ளம்!

1. கருங்கல் கோபுரம் எங்கே உயர்ந்து நிற்கிறது?

_______________________________________________

2. தஞ்சைப் பெருங்கோவில் யாரால் கட்டப்பட்டது ?

_______________________________________________

3. எங்கே மிகப் பெரிய உருண்டை வடிவக்கல் இருக்கின்றது?

_______________________________________________

4. எவை உயிரோவியங்களாகக் காட்சியளிக்கின்றன?

_______________________________________________

_______________________________________________

5. எதைக் கண்டு அறிவியலாளர்கள் வியந்து நிற்கின்றனர்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சொல்லாலும் செயலாலும் வெளிப்படுவது எது?

___

2. வவுனிக்குளத்தின் முன்னைய பெயர் என்ன?

___

3. புலவருக்குத் தன் தலையையே கொடுக்கத் துணிந்த மன்னன் யார்?

___

4. தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் எவை?

___

___

5. சங்கிலி மன்னனின் சிலை எங்கே அமைந்துள்ளது?

___

6. ''அட்டாலும் பால் சுவையில் குன்றாது'' என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?

___

___

7. தொழிற்பாடல்கள் எப்போது பாடப்படும்?

___

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

**ஆ**

| | | |
|---|---|---|
| தயிரும் | வீட்டில் | பால் |
| போற்றுகின்றார் | குழந்தைக்கு | |

பசிய புல்லைத் தின்றிடுமாம்
பாலைப் பொழிந்து தந்திடுமாம்
பசியால் வருந்தும் ________________
அன்போடு ________________ தந்திடுமாம்!

தாயைப் போன்றே ஆ அதனைத்
தரணி மாந்தர் ________________
நேயம் கொண்டே நலஞ்செய்யும்
நெறியைக் கண்டே காக்கின்றார்!

ஆவின் பாலும் ________________ நெய்யும்
பலரும் விரும்பும் பொருள் எனவே
ஆவை ________________ வளர்க்கின்றார்
பயனைக் கொண்டு வாழ்கின்றார்!

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ) உயிர்நெட்டெழுத்துகள் எவை? ____________________

   ஆ) வல்லின மெய்களைத் தருக.

   ____________________

2. அ) திணை எத்தனை வகைப்படும்? ____________________

   ஆ) உயர்திணைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

   ____________________ ____________________

3. பின்வரும் சொற்களை வைத்துச் சொல்லியங்கள் எழுதுக.

   விருந்தினர் ____________________

   நாகரிகம் ____________________

   நூலகம் ____________________

4. பின்வரும் பன்மைச் சொல்லியங்களை ஒருமைச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

   அ) மாமரங்கள் செழித்து வளர்ந்திருந்தன .

   ____________________

   ஆ) நண்பர்கள் கடலில் நீந்தி விளையாடுகின்றனர்.

   ____________________

5. உயர்திணைக்குரிய பால்கள் எவை?

   ____________________

புள்ளிகள் 15

6) **பந்தியைத் வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

தை முதலாம் நாள் தைப்பொங்கல் கொண்டாடப்படும். இது கதிரவனுக்கு நன்றி கூறும் நாள் ஆகும். பொங்கல் அன்று புத்தாடை அணிவர். புதுப்பானையில் பொங்கல் பொங்குவர். இந்நாளில் சிறுவர்கள் மகிழ்சியாகக் காணப்படுவர்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழீழநாடும் விடுதலைப் போராட்டமும்

- மூட ஆமை என்னும் பாடலைக் கதையாக எழுதுக.

- **ஒலிம்பிக்**
  - இதன் தோற்றம்
  - விளையாட்டுகளும் நடைபெறும் காலமும்
  - வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசுகள்
  - முத்திற நோக்கமும் குறிக்கோளும்

புள்ளிகள் 20